and whether any instructions had been given by the Government that such a punishment should be meted out even before the persons were convicted by a Court of Law?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லும்போது, விலங்கு மாட்டுவது குறித்து சில பிரிவுகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சமுதாயக் குற்றங்களுக்கு, விலங்கு மாட்டுவதிலே தவறு இல்லை என்றுதான் கருதுகிறேன்.

THIRU A. R. DAMODARAN : The objection is not to the handcuffing of criminals and even the hoarders and persons who have committed these offences after they are found guilty. The Penal Code may be amended and they can be handcuffed and made to walk 5 miles parading before millions. We have no objection to that. The point is : When a person is arrested on some charge, is it a responsible act on behalf of the Government Officials to parade these people before they are charged before a Court of Law?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைது செய்யப்பட்டாலே குற்றவாளி என்று நிரூபிப்பதற்கு முன்னாலேதான், கைது செய்யப்படும்போது, விலங்கு மாட்டலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. இதைப்போன்ற குற்றவாளி களுக்கு விலங்கு மாட்டலாம் என்பதை இந்த அரசாங்கம் ஆதரிக்கிறது.

Appointment of Director of Prosecutions.

* 10 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to appoint a Director of Prosecutions for the State; and

(b) if so, the stage at which the matter now stands?

குற்ற வழக்குத் தொடரும் இயக்குநர் நியமனம்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்திற்கு குற்ற வழக்குத் தொடரும் இயக்குநர் ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

1975 அக்டோபர் 24]

THE HON. THIRU S. MADHAVAN : (*a*) Yes.

(*b*) It is under the consideration of Government.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினக்கள் 1-ம், 2-ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி * அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. **அறிவிப்புகள்.**

(1) **அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.**

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்டமன்ற மேலவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விபரம் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) **ஆளுநரிடமிருந்து செய்தி.**

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவினை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) **பேரவையிலிருந்து செய்திகள்.**

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) பேரவையால் நிறைவேற்றப் பட்டு, இது அரசியலமைப்புச் சட்டத்தின் 199 வது பிரிவுப்படி பணச்சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது.